# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு I - 2017

## சட்ட வழிமுறை

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

எவையேனும் <u>நான்கு</u> வினாக்களுக்கு <u>மட்டும்</u> விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. "சட்டமானது புத்திஜீவிகளின் முயற்சியினால் முன்னேற்றப்படக்கூடிய சமூக நிறுவனமாகக் கருதப்பட வேண்டியதனால், தண்டனை என்பதற்கு அதிகமாக அதன் சமூக நோக்கத்திற்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்."

   Roscoe Pound,'Fifty Years of Jurisprudence' (1938) 52 Harvard Law Review777, 812.

   ஏதேனும் இரண்டு சட்ட சிந்தனைப் பிரிவுகளுடன் (schools of legal thought) தொடர்புறுத்துவதுடன் நடைமுறை உதாரணங்களையும் ஆதாரங்காட்டி மேற்கூறிய கூற்றினை விமர்சித்து ஆராய்க.

2. "எதிரிடைவாத சட்ட முறைமை (adversarial system) என்பதன் பின்னணியிலுள்ள கோட்பாடானது நடைபெறுகின்ற விசாரணைக்கும் இறுதியாக அவ்வழக்கினை தீர்க்கின்ற நபருக்கும் இடையில் இடைவெளியைப் பேணுதல் என்பதாகும். ஒப்பீட்டளவில், விசாரிப்பு முறைமையில் (inquisitorial system) நீதிபதியானவர் நடபடி முறையில் ஆரம்பத்திலிருந்தே ஈடுபடுவதுடன் உண்மையில் தொகுப்பையும் சான்று தயாரிப்பதனையும் நெறிப்படுத்துகின்றார்."

   இவ்விரு முறைமைகளிலும் நீதிபதிகளின் பங்கு தொடர்பில் குறிப்பாக தொடர்புறுத்தி மேற்கூறிய கூற்றின் வலிதுடைமை மீது நுணுக்கமாகக் கருத்துரை செய்க.

3. சீலாந்து எனும் நாட்டின் தலைநகரில் சேவையில் ஈடுபடுகின்ற பிக்யூ வாகன சேவையின் சாரதியான நுனோ என்பவன் வீதி பாதுகாப்பு சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் கவனயீனமாக வாகனம் செலுத்தியமைக்காகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளான். அதிர்ச்சிதருகின்ற வகையில் அதிகரித்துவருகின்ற வீதி விபத்துகளினால் ஏற்படும் மரணங்கள் மற்றும் காயங்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு 2000 ஆம் ஆண்டில் சீலாந்தின் பாராளமன்றமானது வீதி பாதுகாப்பு சட்டத்தினை ஆக்கியது. அச்சட்டத்தின் பிரிவு 2 ஏற்பாடு செய்வதாவது "பொது பிரதான வீதி ஏதாவதில் மோட்டார் வாகனத்தை கவனயீனமாக செலுத்துகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின் கீழ் குற்றமொன்றிற்குக் குற்றவாளியாவான்."

வாகனத்தை ஓட்டுகின்ற போது நுனோ கையடக்கத்தொலைபேசியைப் பாவிப்பதனை அவதானித்த போக்குவரத்து பொலீஸ் அதிகாரிகள் வீதி பாதுகாப்பு சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் அவன் மீது குற்றஞ்சாட்டுகின்றனர். எவ்வாறாயினும், அக்குற்றச்சாட்டினை மறுக்கின்ற நுனோ வாகனத்தை ஓட்டும் போது மற்றவர்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தினைத் தடுப்பதற்குரிய நியாயமான அளவு கவனத்தைத் தான் எடுத்ததாகவும் குறிப்பிடுகின்றான்.

சீலாந்தின் சட்டமுறைமையானது இலங்கைக்கு ஒத்ததெனக் கருதுவதுடன் இவ்வழக்கினை விசாரிக்கு நீதிபதி என உம்மைக் கருதுக. இவ்வழக்கினைத் தீர்ப்பதற்கு நீர் பயன்படுத்தும் பொருள்கோடல் விதிகளை ஆராய்க. உமது விடையானது தீர்க்கப்பட்ட வழக்குகளினால் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

4. X, Y மற்றும் Z ஆகியனவற்றில் தங்கியுள்ள வழக்கொன்றானது மூன்று நீதிபதிகளை கொண்ட அமர்வொன்றில் இலங்கையின் உயர் நீதிமன்றில் வாதாடப்படுகின்றது. உமது விடையை உறுதிப்படுத்துவதற்கு, பொருத்தமான அதிகாரங்களைத் தந்து கீழ்வரும் தீர்ப்புகளின் ஏற்புடைமையை ஆராய்க:

(அ) 1987 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டதான X, Y மற்றும் Z ஆகிய நிகழ்வுகளின் மீதமைந்த வழக்கொன்றில் இலங்கை உயர்நீதிமன்றத்தின் நிறைகுழாம் தீர்ப்பொன்று;

(ஆ) X, Y, Z மற்றும் W ஆகிய நிகழ்வுகள் மீதமைந்த வழக்கொன்றில்

இலங்கையிலிருந்து செய்யப்பட்ட மேன்முறையீட்டின் போது கோமறைக் கழகத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்று;

(இ) 2015 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டதான X, Y மற்றும் Z ஆகிய நிகழ்வுகள் மீதமைந்த வழக்கொன்றில் இந்தியாவின் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பொன்று;

(ஈ) X, Y மற்றும் Z ஆகிய நிகழ்வுகள் மீதமைந்த வழக்கொன்றில் இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளைக் கொண்ட அமர்வொன்றால் 2008 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தீர்ப்பொன்று;

5. 2017 ஆம் ஆண்டு தை மாதம் சீலாந்து அரசாங்கமானது 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மிருகங்களை துன்புறுத்துவதனை தடுக்கும் சட்டத்தை உருவாக்கியது. அச்சட்டத்தின் பாயிரம் ஏற்பாடு செய்வதாவது "மிருகங்கள் மீதான அநாவசியமான வலி, பாதிப்படைய வைத்தல் மற்றும் துன்புறுத்தலைத் தடுப்பதற்கான சட்டம்."

அச்சட்டத்தின் பிரிவு 5 ஏற்பாடு செய்வதாவது " ஏதேனும் மிருகத்தின் பாதுகாப்பு அல்லது பொறுப்பு உடைய ஆளொவ்வருவரும் அம்மிருகத்தின் நலனை உறுதிபடுத்துவதற்குத் தேவைப்படுகின்றதான நியாயமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்பதுடன் அம்மிருகங்கள் மீதான அநாவசியமான வலி, பாதிப்படைய வைத்தல் மற்றும் துன்புறுத்துதலைத் தடுப்பதும் கடமையாகும்."

சீலாந்திலுள்ள மிருக உரிமைகள் நிறுவனமொன்றான *அவிஹிம்சா ஃபவுண்டேஷன்* என்பது 2016 ஆம் ஆண்டு யூலையில் ஆய்வொன்றினை மேற்கொண்டதுடன், ஆலய விழாக்களின் போது யானைகள் விலங்கிடப்படுவதுடன், சங்கிலிகலினால் கட்டப்பட்டு தார் வீதியில் கட்டாயப்படுத்தி நடக்கவைக்கப்படுவதாகவும் அதனால் மிருகங்கள் மீது வலி ஏற்படுத்தப்படுவதுடன் அவை பாதிப்பிற்குள்ளாக்கப்படுவதாகவும் அறிக்கை வெளியிட்டனர்.

யானைகள், தங்களுடைய மனித எஜமான்களின் சந்தோஷத்திற்காகவும் அனுபவித்தலுக்காகவும் தடுத்துவைக்கப்பட்டுள்ளன எனவும் அவ்வறிக்கை

மேலும் வெளிப்படுத்தியது. இத்தகைய குழப்பமான தன்மையுடைய வெளிப்படுத்துகை காரணமாக, வருடாந்த ஊர்வலத்தில் யானைகள் பங்குபற்றுதலானது மிருகங்களை துன்புறுத்துவதனை தடுக்கும் சட்ட ஏற்பாடுகளை மீறுகின்றதென *அவிஹிம்சா பீவுண்டேஷன்* கோருகின்றது. எவ்வாறாயினும், வருடாந்த ஊர்வலத்தினை ஏற்பாடு செய்கின்ற ஒழுங்கமைப்பாளர்களின் கருத்துப்படி சமய சடங்குகளில் யானைகளை பயன்படுத்துதலானது நீண்டகாலமாக இருந்துவருகின்றதும் நாட்டின் வழக்காற்றுடன் நெருங்கிய தொடர்புடையதுமான சமய சடங்கொன்றென்பதுடன் அது சீலாந்து சமூகத்தின் உள்ளங்களில் ஆழமாக பதிக்கப்பட்டுள்ளதெனவும் குறிப்பிடுகின்றனர்.

இவ்வழக்காற்றின் வலிதாந்தன்மை குறித்து *அவிஹிம்சா பீவுண்டேஷனானது* தற்போது உமது ஆலோசனையைக் கோருகின்றது. தீர்க்கப்பட்ட வழக்குகளினை ஆதாரப்படுத்தி ஆலோசனை வழங்குக. சீலந்தின் சட்டமுறைமையானது இலங்கையினதை ஒத்ததெனக் கருதுக.

6. "21 ஆம் நூற்றாண்டில் சட்டம் : சட்ட சீர்திருத்தத்திற்கான அவசியம்" என்ற கருப்பொருளின் கீழ் நடைபெறவிருக்கின்ற கனிஷ்ட தேசிய சட்ட மாநாட்டில் ஆய்வுக் கட்டுரையொன்றைச் சமர்ப்பிக்க நீர் அழைக்கப்பட்டுள்ளீர் என அனுமானிக்க. உமது கட்டுரையானது "இலங்கையின் சட்டப்படிமுறையில் பிணக்குத் தீர்வுக்கான மாற்றுவழி முறை ஒன்றாக (ADR) மத்தியஸ்தத்தின் தாக்கம்" என்பதனை கருத்திலெடுக்க தேவைப்படுத்தப்பட்டுள்ளீர். உமது சமர்ப்பனமானது மத்தியஸ்த சபை தொடர்பில் தற்காலத்தில் இலங்கையில் ஏற்புடையதான சட்ட ஏற்பாடுகள், அதற்கான காரணம், அதனது சாதக பாதகங்கள் மற்றும் இலங்கையில் செயலாக்கமுடையதும் பயனுறுதியுடையதுமான மத்தியஸ்த சபைமுறைமையை உருவாக்குவதற்குத் தேவையான சட்ட சீர்திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றையும் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

பொருத்தமான சட்ட ஏற்பாடுகள் மற்றும் நடைமுறை உதாரணங்களுடன் தொடர்புறுத்தி உமது ஆய்வுக்கட்டுரையை வரைக.

7. வழக்கறிஞர்களின் உயர்தொழில்சார் அறநெறிக்கோட்பாடுகளுடன் தொடர்புறுத்தி கீழ்வரும் சந்தர்ப்பங்களுக்கு விடையளிக்க:

(அ) "X" என்கின்ற சட்டதரணியொரவர் தமது கட்சிக்காரர் சார்பாக இலங்கையின் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டுக்கான அனுமதி விண்ணப்பமொன்றை தாக்குதல் செய்வதற்கு வழங்கப்பட்டிருந்த கால எல்லையை கடக்காதிருப்பதற்காக இறுதிகட்டத்தில் போராடுகின்றார். அவர் சார்பாக ஏற்பட்ட காலதாமதத்தினால், வழங்கப்பட்டிருந்த காலப்பகுதியினுள் நீதிமன்றத்தில் விண்ணப்பத்தினை தாக்குதல் செய்யத் தவறுகின்றார்.

(ஆ) "Y" என்கின்ற சட்டதரணி பொலிஸ் நிலையத்தின் குற்றங்களுக்கு பொறுப்பான நிலையப்பொறுப்பதிகாரியிடம் வழக்குகளைத் தனக்கு பாரப்படுத்தும படி வேண்டுவதுடன் அதற்காக நிலையப்பொறுப்பதிகாரிக்கு மாதாந்தம் ரூபா 10000 செலுத்துவதாகவும் வாக்களித்தார்.

(இ)"Z" என்கின்ற சட்டதரணி தன் கட்சிகாரரிடம் போலி உறுதியொன்றினைத் தயாரித்து அதனை விசாரணையின் போது சமர்ப்பிக்கும்படி கோரினார்.

(ஈ)"M" மற்றும் "N" என்கின்ற எதிர்கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இரு வழக்கறிஞாகள் விசாரணையின் போது கட்சிக்காரர்கள் மற்றும் நீதிபதியின் முன்னிலையில் பொருத்தமற்ற வார்த்தைகளைப் பாவித்துச் சண்டையிட்டனர்.

****